**OPEN ACCESS**

Manuscript ID: TAM-06032022-4619

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 12.10.2021

Accepted: 18.12.2021

Published: 01.01.2022

Citation: Chandrasekaran, M., and U. Alibava. "Vinaingnar in Perumpaanaatruppadai." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 60–65.

DOI: https://doi.org/10.34293/tamil.v6i3.4619

*Corresponding Author: chandruchellam19@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Vinaingnar in Perumpaanaatruppadai

**Dr. M. Chandrasekaran**
*Post Doctoral Fellow*
*Department of Tamil Studies*
*Bharathidasan University, Tiruchirappalli*
https://orcid.org/0000-0002-6224-9691

**Dr. U. Alibava**
*Professor & Head*
*Department of Tamil Studies*
*Bharathidasan University, Tiruchirappalli*
https://orcid.org/0000-0002-2051-7002

**Abstract -** Classical Literatures resembles the ancient Tamil social system. Although the 'sangam period was a golden age' with the terrestrial system of Kurinchi, mullai, marutham and neythal, the rich, the poor, the landlords and the landless lived in that period. The land owners were economically prosperous and the landless were unwealthy and employer for the landlords. The classical songs show that this difference is abundant in the affluent wetland community. One of the Classical song Perumpaanaatruppadai features news about a worker (Vinaingnar) who lives and works with landowners for the most part.

**Keywords:** Tamil Literatures, Classical literatures, Perumpaanaatruppadai, Sangam Period, Society, Social Organization, Economy, Selver, Poor man, Landlord, Landless Person, Vinaingnar.

**References**

1. Ilampuranar (comm.). 1977. Tholkaappiyam Porulathikaram, Chennai : Thirunelveli thenindhiya saivasithantha noorpathippu kazhagam Ltd.
2. Kazhaga Pulavar Guluvinar. 2017. Kazhaga Tamil Akarathi, Chennai : Thirunelveli thenindhiya saivasithantha noorpathippu kazhagam Ltd.
3. Sanmugam pillai M. 1985. Tamil - Tamil Agara Muthali, Chennai : Tamilnadu Paadanool Niruvanam.
4. Chithamparanar Saami. 1956. Paththuppaattum Pandaiya Tamizhar Vaazhvum, Chennai : Sivagami Chithamparanar Ilakkiya Nilaiyam.
5. Dakshinamurthy A. 2001. Sanga Ilakkiyangal Unarththum Manitha Uravugal, Thanjavur : Mangayarkkarasi Pathippagam.
6. Paththuppaattu Mulamum Uraium, Chennai : Kazhaga Veliedu.
7. Pelov K. 1989. Arasu Entral Enna?, Chennai : Munnettaram Pathippagam.
8. 2016. Creayavin Tharkala Thamizh Akarathi, Chennai : Kazhaga Veliedu.
9. The world knowledge Encyclopedia, vol. 21, Italy : Heron Books.

# பெரும்பாணாற்றுப்படையில் வினைஞர்

***முனைவர் ம. சந்திரசேகரன்***
முனைவர் பட்ட மேலாய்வாளர்
தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

***முனைவர் உ. அலிபாவா***
தலைவர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச் சுருக்கம்***
*சங்க இலக்கியங்கள் பண்டையத் தமிழ்ச் சமூக அமைப்பினை இயம்புகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நானில அமைப்பைக்கொண்ட "சங்க காலம் பொற்காலம்" என்றாலும் அக்காலத்தில் செல்வர்களும் வறியவர்களும், நிலவுடைமைதாரர்களும் நிலமற்றவர்களும் வாழ்ந்தனர். நிலவுடைமைதாரர்கள் பொருளாதார வளர்ச்சி மிக்கவர்களாகவும், நிலமற்றவர்கள் வளம் குன்றியவர்களாகவும் பணியாளரர்களாகவும் இருந்துள்ளனர். இந்த வேறுபாடு வளமிக்க மருத நிலச் சமூகத்தில் மிகுதியாகக் காணப்பட்டது. சங்கப் பாடல்களுள் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் நிலவுடைமைதாரர்களிடம் உழைத்து வாழும் வினைஞர் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.*
***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் இலக்கியம், சங்க இலக்கியம், பெரும்பாணாற்றுப்படை, சங்க காலம், சமூகம், சமூக அமைப்பு, பொருளாதாரம், செல்வர், வறியர், நிலவுடைமைதாரர், நிலமற்றவர், வினைஞர்.*

பண்டைத் தமிழ்ச் சமூக அமைப்பில் மேலோர் - கீழோர், செல்வர் - வறியர், உழுவித்துண்பார் - உழுதுண்பார் எனும் வேறுபாடுகள் காணப்பட்டுள்ளன. இவ்வேறுபாடு நிலவுடைமைச் சமூகத்தில், ஒருவரின் உடைமையாக நிலம் இருந்ததைக் காட்டுகிறது. எனவே தான், நிலவுடைமைதாரர்களிடமும் செல்வர்களிடமும் உழைத்து வாழும் வறியவர்கள் வேலை செய்துள்ளனர். இவர்கள் வினைஞர், களமர், கடைசியர், செவிலியர், இளையோர் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் வினைஞர் மருதநில வயல்களில் வேலை செய்தோராவர். இவ்வினைஞர் வாழ்வியலையும் சமூகத்தளத்தில் எத்தகைய இடத்தினைப் பெற்றனர் என்பதையும் பெரும்பாணாற்றுப்படை வழி இக்கட்டுரை ஆய்ந்துரைக்கிறது.

## வினைஞர்

வினைஞர் பழந்தமிழ் இலக்கியத்தில், "மடியா வினைஞர்", "கருங்கை வினைஞர்", "வன்கை வினைஞர்", "அரிப்பறை வினைஞர்" என அழைக்கப்பட்டுள்ளனர் (பெரும்பாண். 254 - 255, 223, புறம். 61: 8, ஐங் 81: 2).

"கம்மாளர், கூத்தர், சூத்திரர், செயலாளர், மருத நிலமாக்கள், தொழில் செய்வோர்" எனும் பொருண்மைகளைக் கழகத் தமிழ் அகராதி வினைஞர் என்ற சொல்லுக்குச் சுட்டுகிறது (2017. ப. 865).

க்ரியாவின் தற்காலத் தமிழகராதி வினைஞர் எனும் சொல்லுக்கு, "கலைநுட்பம் மிகுந்த கைவினைப் பொருள்கள் போன்றவற்றைச்

செய்யும் கலைஞர்" என்ற பொருளைத் தருகிறது (2016. ப.1282).

வினைஞர் என்ற சொல்லிற்குத் தமிழ் - தமிழ் அகரமுதலி, "தொழில் செய்வோர்" மருதநில மக்கள் "கம்மாளர்" கூத்தர்" வணிகர்" வேளாளர்" எனும் பொருண்மையைப் பகர்கிறது (1985. ப. 989).

மதுரைக்காஞ்சி,

**நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுக**
**(மதுரைக். 539)**

எனக் கூறுவதன்மூலம் வினைஞர் எனும் சொல் வணிகரைக் குறிக்கிறது. சிறுபாணாற்றுப்படை,

**கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி**
**(சிறுபாண். 257)**

என உரைப்பதன் மூலம் வினைஞர் என்ற சொல் கொல்லர், தச்சர் எனும் பொருண்மையைச் சுட்டுகிறது. ஆயினும், சங்க இலக்கியங்களில் வினைஞர் பெரும்பான்மையாக வேளாண் பணி செய்வோராகவே குறிப்பிடப்பட்டுள்ளனர் (பதிற். 58 : 15, 75 : 9, மலைபடு. 462, அகம். 84 : 13, 116 : 2, 184 : 13, 186 : 2, 194 : 7, ஐங். 81 : 2).

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார்,

**பழன வாளைப் பரூஉக்கட் டுணியல்**
**புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை யாக**
**விலாப்புடை மருங்கு விசிப்ப மாந்தி**
**நீடுகதிர்க் கழனி சூடுதடு மாறும்**
**வன்கை வினைஞர் புன்றலைச் சிறாஅர்**
**(புறம். 61 : 4 - 8)**

என வினைஞர் குறித்துக் குறிப்பிடுகிறார். இதன் மூலம் வினைஞர் வயல்களில் பணிசெய்யும் உழவர் என்பதை அறியமுடிகிறது.

### பெரும்பாணாற்றுப்படையில் வினைஞர்

மருதநிலச் சூழல் ஏவல் தொழிலைச் செய்யும் மக்களைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக அமைந்தது என்பதை அ. தட்சிணாமூர்த்தி, "நீர்வளமும் நிலவளமும் கொண்ட மருத நிலப்பகுதி ஏனைய நிலப்பகுதிகளை விடப் பன்மடங்கு முன்னேறியிருந்தது. கல்வியிலும் கலைகளிலும், சமயவளர்ச்சியிலும், மருத நிலம் நன்கு முன்னேறி இருந்தது. இங்ஙனமே, பிறர்க்கு ஏவல் செய்யும் ஒரு சார் மக்களைத் தோற்றுவிப்பதிலும் அது முன்னின்றதாகத் தெரிகின்றது. உழவுத் தொழிலின் தன்மை இதற்குப் பெரிதும் உதவிற்று" என விளம்புகிறார் (2001. சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள், ப. 163).

சாமி சிதம்பரனார், "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் நிலமற்ற உழவர்கள் இருந்தனர். நிலமற்ற வகுப்பினர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எனக் கருதப்பட்டனர். நிலமுள்ள உழவர்கள் வேளாளர்கள் என்றும் உயர்ந்த வகுப்பினராக கருதப்பட்டனர். இவ்விரு வகுப்பினரும் ஒழுக்கத்திலும் நாகரிகத்திலும் பழக்க வழக்கங்களிலும் மாறுபட்டிருந்தனர்" எனக் கூறுகிறார் (1956. பத்துப்பாட்டும் பண்டைத்தமிழர் வாழ்வும், ப. 86). மருதநில வயல்களில் பணிசெய்த வினைஞரைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார்,

**கார்ஏறு பொருத கண்அகன் செறுவின்**
**உழாஅநுண்தொளி நிரவிய வினைஞர்**
**(பெரும்பாண். 210 - 211)**

எனக் குறிப்பிடுகிறார். வினைஞர் வயல்களில் கடுமையாக உழைத்ததனால் அவர்தம் கைகள் உறுதியாக விளங்கின (புறம். 61 : 8) உடல் இரும்பு வடித்ததைப் போல் காணப்பட்டது என்பதை,

**இரும்பு வடித்தன்ன மடியா மென்தோல்**
**கருங்கை வினைஞர்**
**(பெரும்பாண். 222 - 223)**

எனும் அடிகள் எடுத்துரைக்கின்றன. இவர்கள் உழவுத் தொழிலோடு தொடர்புடைய விதை விதைத்தல், நாற்றுநடுதல், களையெடுத்தல், கதிரறுத்தல், கடாவிடுதல் போன்ற அனைத்து வேலைகளையும் செய்துள்ளனர் என்பதை,

**பைதுஅற விளைந்த பெருஞ் செந்நெல்லின்**
**தூம்புடைத் திரள்தாள் துமித்த வினைஞர்**
**பாம்புஉறை மருதின் ஓங்குசினை நீழல்**
**பலிபெறு வியன்களம் மலிய ஏற்றி**
**கணம்கொள் சுற்றமொடு கைபுணர்ந்து ஆடும்**
**துணங்கை அம்புதம் துகில் உடுத்தவை போல்**
**சிலம்பி வால்நூல் வலந்த மருங்கின்**
**குழுமுநிலைப் போரின் முழுமுதல் தொலைச்சி**
**பகடுஊர்பு இழிந்த பின்றை துகள்தப**
**வையும் துரும்பும் நீக்கிப் பைது அற**
**குடகாற்று எறிந்த குப்பை வடபால்**
**செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றும்**
**(பெரும்பாண். 230 - 241)**

என்ற பாடலடிகள் இயம்புகின்றன. இதன் மூலம் வினைஞர் மருத நில வயல்களில் உழுதுண்ணும் வேளாண் பணி மக்களாக விளங்கினர் என்பதை அறிய முடிகிறது.

## வினைஞரின் வாழ்விடம்

வினைஞரின் வாழ்விடம் மிகவும் எளிமையாக இருந்துள்ளது. ஊருக்கு வெளியே வயல் வரப்பு ஓரமாக வைக்கோலால் வேயப்பட்ட குடில்களில் வாழ்ந்துள்ளனர். அக்குடில், "புதுவை வேய்ந்த கவிகுடில்" என அழைக்கப்பட்டுள்ளது (பெரும்பாண். 225). குடிலின் முன்பகுதியில் பெண்டிர் அவலிடித்ததை,

**புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்**
**அவல்எறி உலக்கைப் பாடுவிறந்து அயல**
**(பெரும்பாண். 225 - 226)**

எனும் அடிகள் விளம்புகின்றன.

## வினைஞரின் சிறாஅர்

வினைஞரின் சிறுவர்கள் வயல்களில் காணப்பட்ட முள்ளி மலர்களைப் பறித்து, பஞ்சாய்க்கோரைப்புல்லைப் பல்லால் சவட்டி நாராக்கி, அதில் முள்ளி மலர்களைக் கண்ணி களாகக் கட்டியுள்ளனர். அக்கண்ணிகளை ஈரும் பேனுமுள்ள கரிய தம் தலையில் அணிந்துள்ளனர். பொன்னை உரைத்துப் பார்க்கும் கட்டளைக் கல்போன்ற நிறமுடைய சம்பங்கோரையின் மென்மையான காயின் சுண்ணத்தை மார்பில் பூசிக் கொண்டு வயல்களில் சுற்றித் திரிந்துள்ளனர். இவர்கள் பழஞ் சோற்றை உண்டனர். இவ்வுணவு வெறுக்கும் காலங்களில் அவலை இடித்து உண்டுள்ளனர் (பெரும்பாண். 215 - 226). புறநானூறு,

**வன்கை வினைஞர் புன்றலைச் சிறாஅர்**
**தெங்குபடு வியன்பழ முனையிற் றந்தையர்**
**குறைக்க ணெடும்போ ரேறி விசைத்தெழுந்து**
**செழுங்கோட் பெண்ணைப் பழந்தொட**
**முயலும்**
**(புறம். 61 : 8 - 11)**

என வினைஞரின் புன்றலைச் சிறாஅரின் செய்கையைச் சுட்டுகிறது.

## நிலக்கிழார்

மருத நிலத்தில் வாழ்ந்த நிலக்கிழார்கள் இல்லத்தில் அழகிய பசு ஈன்ற கன்றுக் குட்டிகள் கட்டப்பட்டிருந்தன. உயர்ந்த நெற்குதிர்களில் பல்வகை நெல் வகைகள் நிறைந்து காணப்பட்டன. நெல் நிறைந்த குதிர் "மூத்தகூடு" என அழைக்கப்பெற்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நல்இல்லத்தில் மருத நில உடைமையாளர்கள் செல்வ வளத்துடன் வாழ்ந்தனர் என்பதை,

**செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றும்**
**தண்பணை தழீஇய தளரா இருக்கை**
**பகட்டுஆஈன்ற கொடு நடைக் குழவிக்**
**கவைத்தாம்பு தொடுத்த காழ்ஊன்று அல்குல்**
**ஏணி எய்தா நீள்நெடு மார்பின்**
**முகடுதுமித்து அடுக்கிய பழம்பல் உணவின்**
**குமரி மூத்தகூடு ஓங்கு நல்இல்**
**(பெரும்பாண். 241 - 247)**

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.

**நிலக்கிழாரின் சிறுவர்கள்**

நிலக்கிழாரின் இல்லங்களில் சிறுவர்கள் ஓட்டுகின்ற நடை வண்டி, அதைச் செய்யும் தச்சர்களின் குழந்தைகளாலும் விரும்பப்படும் அளவிற்குச் சிறந்து விளங்கியது. சிறுவர்கள் நடைவண்டி ஓட்டிக் களைத்தபோது அவர்களின் களைப்பைப் போக்கச் செவிலிப் பெண்கள் பால் தந்துள்ளனர். செவிலியரிடம் பாலை உண்ட சிறுவர் அமளியில் உறங்கியுள்ளனர். இதனைக் கடியலூரர் உருத்திரங் கண்ணனார்,

**தச்சர் சிறாஅர் நச்சப் புனைந்த**
**ஊரா நல்தேர் உருட்டிய புதல்வர்**
**தளர்நடை வருத்தம் வீட அலர்முலைச்**
**செவிலி அம்பெண்டிர்த் தழீஇ பால்ஆர்ந்து**
**அமளித் துஞ்சும் அழகுடை நல்இல்**
**(பெரும்பாண். 248 - 252)**

என்கிறார்.

**விருந்தோம்பல்**

மருத நில செல்வந்தர் தொல்பசி அறியா நிலையில் செல்வ வளத்துடன் பேரூரில் வாழ்ந்துள்ளனர். இவர்கள், தம் இல்லத்திற்கு வரும் விருந்தினருக்கு வெண்மையான சோற்றைக் கோழிப் பொரியலுடன் வழங்கியுள்ளனர். இதனை,

**தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை**
**மல்லல் பேர்ஊர் மடியின் மடியா**
**வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி**
**மனைவாழ் அளகின் வாட்டொடும்**
**பெறுகுவிர் (பெரும்பாண். 253 - 256)**

எனும் அடிகள் தெரிவிக்கின்றன. இங்கு "வினைஞர் தந்த வெண்ணெல்" என்பதன் மூலம் வினைஞர், நிலக்கிழார்களாகிய வேளாண் மாந்தரிடம் பணிமக்களாக இருந்தனர் என்பதையும் நிலக்கிழார் உழுவித்துண்ணும் வேளாண் மக்களாக விளங்கியுள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது. தொல்காப்பியம்,

**அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்**
**கடிவரை இல.**
**(தொல். பொருள். அகத். நூ. 25)**

என்றும்,

**ஏவல் மரபின் ஏனோரும் உரியர்**
**(தொல். பொருள். அகத். நூ. 26)**

என்றும் விளம்புகிறது. இங்கு ஏனோரும் என்பதற்கு நச்சினார்க்கினியர், "நால்வகை வருணமென்று எண்ணியவகையினால் ஒழிந்து நின்ற வேளாளரும்" என்று உனர வகுக்கிறார் (இளம்பூரணர் (உ. ஆ.), 1977. தொல்காப்பியம் பொருளதிகாரம், ப. 29). அ. தட்சிணாமூர்த்தி, "பண்டைத் தமிழகத்தில் உழவும் வாணிகமும் வளர்ச்சியடைந்ததன் விளைவாகப் பிறரை ஏவல்கொள்ளும் ஒருசார் மாந்தர் உருவாயினர். பணியாளரும் தோற்றமெடுத்தனர்" என்கிறார் (2001. சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள், ப. 176).

பெலோவ், "உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமையும் உடைமையில் ஏற்றத் தாழ்வும் ஏற்படுகின்றபொழுது வர்க்கங்கள் தோன்றுகின்றன. செல்வர்களும் ஏழைகளும், முதலாளிகளும் தொழிலாளர்களும் தோன்றுகிறார்கள். அவர்களுடைய நலன்கள் ஒரே மாதிரியானவை அல்ல, அவை நேரெதிரானவை" எனச் சமூக வர்க்க நிலையைச் சுட்டுகிறார் (1989. அரசு என்றால் என்ன?, ப. 15).

"ஒரு மனிதன், இன்னொருவனுடைய முழு ஆட்சிக்குட்பட்டு, அவனுடைய உடைமையாகக் கொள்ளப்படும்பொழுது அவன்அடிமையென்னும்பெயர்க்குரியனாகின்றான்" (The world knowledge Encyclopedia, vol. 21. 4981). ஆனால், பெரும்பாணாற்றுப்படை வழி வேளாண் சமூகத்தில் நிலமற்ற வினைஞர் நிலவுடைமையாளரான நிலக்கிழாரிடம் பணியாளராகப் பணிபுரிந்துள்ளனரே தவிர அடிமைகளாக இருக்கவில்லை என்பது புலனாகிறது.

**முடிவுகள்**

1. வினைஞர் நிலத்திற்கு உரிமையானவர் அல்லர். பிறர் நிலங்களில் பணிபுரிந்த உழைப்பாளராவர்.

2. ஊருக்கு வெளியே வயல் வரப்பு ஓரமாக வைக்கோலால் வேயப்பட்ட குடில்களில் வாழ்ந்த வினைஞரின் பொருளாதார நிலை மிகவும் எளிமையாக இருந்துள்ளது.
3. நிலக்கிழார்களாகிய வேளாண் மாந்தரிடம் உயர்ந்த பல்லுணவுகள் நிறைந்த நெற்குதிர் கொண்ட நல்இல்லம் இருந்துள்ளது. இவ்வில்லம், "தொல்பசியறியாத் துளங்கா இருக்கை" என்றும் "குமரி மூத்தகூடு ஓங்கு நல்இல்" என்றும் "அமளித் துஞ்சும் அழகுடைநல்இல்" என்றும் சிறப்பிக்கப்பட்டுள்ளது.
4. நிலக்கிழார்கள் வாழ்ந்த பேரூர் மருதத் தண் பணைகளால் சூழப்பட்டிருந்தன. ஆனால், வினைஞர் குடியிருப்பு வயல் வரப்புகளின் ஓரமாகக் காணப்பட்டது. இதன்மூலம் நிலக்கிழார்களின் உயர்ந்த சமூக நிலையினையும் ஏற்றத்தாழ்வு மிக்க சமூக அமைப்பினையும் காணமுடிகிறது.
5. வினைஞரின் சிறார் ஈருடைய தலையுடையவராய் வயல் வெளிகளில் சுற்றித் திரிந்துள்ளனர் பழஞ் சோற்றை உண்டுள்ளனர் பழஞ் சோற்றை வெறுத்தும் ஒதுக்கியுள்ளனர். ஆனால், நிலக்கிழாரின் சிறுவர்கள் ஊரா நல்தேர் உருட்டி விளையாடியுள்ளனர்; களைப்பு ஏற்படும்பொழுது செவிலியரிடம் பால் குடித்து உறங்கியுள்ளனர். இஃது சமூகப் பொருளாதார வர்க்க வேறுபாட்டினைக் காட்டுகிறது.
6. நிலக்கிழாராகிய வேளாண் மாந்தரின் இல்லத்தில் செவிலி பெண்கள் பணி மக்களாக இருந்துள்ளனர்.

**துணை நூற்பட்டியல்**

1. இளம்பூரணர் (உ. ஆ.). 1977. *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
2. கழகப் புலவர் குழுவினர் 2017. *கழகத் தமிழ் அகராதி.* சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசி த்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
3. சண்முகம் பிள்ளை, மு. 1985. *தமிழ் - தமிழ் அகரமுதலி.* சென்னை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.
4. சிதம்பரனார் சாமி. 1956. பத்துப்பாட்டும் *பண்டைத் தமிழர் வாழ்வும்.* சென்னை, சிவகாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம்.
5. தட்சிணாமூர்த்தி அ. 2001. *சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள்,* தஞ்சாவூர், மங்கையர்க்கரசி பதிப்பகம்.
6. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்,* சென்னை, கழக வெளியீடு.
7. பெலோவ், கி. 1989. *அரசு என்றால் என்ன?,* மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம்.
8. 2016. *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,* சென்னை, க்ரியா வெளியீடு.
9. The world knowledge Encyclopedia, vol. 21, Italy: Heron Books.